## வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிறைவேட்) லிமிட்டட்– 2017/2018

---

வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் (“கம்பனி”) 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டக்கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய கம்பனியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத் துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் மூலம் நான் உதவியைப் பெற்றிருந்தேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“சபை”) பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய பொருண்மைத்துவம்வாய்ந்த நிச்சயமற்றதன்மை

எனது அபிப்பிராயத்தினை முனைப்பழிசெய்யாது, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு எடுகோள் மீதான நிதிக்கூற்றுக்களின் 2.3 ஆம் குறிப்புக்கு எனது கவனத்தைச் செலுத்தியுள்ளேன்.

### 2.3 ஏனைய தகவல்

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவலினை மேவுகை செய்திருக்காததுடன் நான் அவற்றின் மீது எவ்விதவடிவமான உறுதிப்பாட்டு தீர்மானத்தனையும் வெளிப்படுத்தமுடியாதுள்ளேன். முகாமைத்துவம் ஏனைய தகவலுக்கு பொறுப்புடையதாகக் காணப்படுகின்றது. இந்த நிதிக்கூற்றுக்கள் எவ்விதமான ஏனைய தகவலினையும் கொண்டிருக்கவில்லை.

### 2.4 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,
- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளினை முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 9,679,102,580 உடன் ஒப்பிடும் போது ரூபா 11,073,254,824 ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 1,394,152,244 ஆன அதிகரிப்பொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. விற்பனைகள் கிரயம் ரூபா 7,298,354,286 இனால் அதிகரித்திருந்த போதிலும், மின்வலு உற்பத்தி வருமானம் மற்றும் ஏனைய செயற்பாட்டு வருமானம் முறையே ரூபா 6,905,055,755 மற்றும் ரூபா 1,469,625,251 இனால் அதிகரித்தமை மேற்குறித்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

கம்பினியினால் கூட்டிணைந்த திட்டமொன்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மின்வலு உற்பத்திக்ள தொடர்பில் கம்பனியினால் விநியோகிக்கப்பட்ட மாதாந்த பட்டியல்கள் மீளாய்வு செய்யப்பட்டிருந்ததுடன் பட்டியலிடப்பட்ட தொகையினை விட குறைந்த தொகையொன்று சீஈபீ இனால் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான பட்டியலிடப்பட்ட தொகை மற்றும் செலுத்தப்பட்ட தொகைகளுக்கிடையே அதிகமான சந்தர்ப்பங்களில் 2 சதவீதம் தொடக்கம் 13 சதவீதம் வரையான வீச்சொன்றில் வித்தியாசம் அவதானிக்கப்பட்டன. எவ்வாறாயினும், வித்தியாசத்திற்கு தாக்கமளித்திருந்த காரணங்கள் சீஈபீ இனால் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் கம்பனி அது ஏற்பட்டதிலிருந்துகூட வித்தியாசத்தினை இணக்கஞ்செய்திருக்கவில்லை.

(ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம், 2012/2013 மற்றும் 2013/2014 ஆம் ஆண்டிற்கான வரி மதிப்பீடு மற்றும் அவற்றிற்கான தண்டப்பணங்கள் முறையே ரூபா 133,500,000 மற்றும் ரூபா 97,500,000 தொகைகள் கம்பனியினால் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

---

கம்பனி ஆட்சேர்ப்புத் திட்டத்தினை (எஸ்ஓஆர்) தயாரித்திருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

---

உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று கம்பனியினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 கணக்காய்வுக் குழுக்கள்**

---

மீளாய்வாண்டிற்கு கம்பனியினால் கணக்காய்வுக் குழுக்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**5.3 வருடாந்த பாதீடு**

---

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியினால் வருடாந்த பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. நிலைபேறான அபிவிருத்தி**

---

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (எஸ்டீஜி) தொடர்பான ஐக்கிய நாடுகளின் ''2030 நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம், அனைத்து அரச நிறுவனங்களும் அதன் பரப்பெல்லையின் கீழ் காணப்படும் இலக்குகள் மற்றும் தொழிற்பாடுகளினை அமுல்படுத்துகையில் பங்களிப்புச் செய்தல் வேண்டும். எவ்வாறாயினும், கம்பனி எஸ்டீஜி இனை அறிந்திருக்காததுடன் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குகள், அந்த இலக்குகளினை அடைந்துகொள்வதிலுள்ள இடைவெளிகள் மற்றும் செயலாற்றலினை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள்கூட இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

**நடைமுறைசார் கையேடு**

---

உருவாக்கப்பட்ட நாளேட்டு உறுதிச்சீட்டுக்கள் தொடர்பில் மாதாந்த அறிக்கை நடைமுறைசார் கையேட்டின் பிரகாரம் CEO இற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அனைத்து முக்கியத்துவம்வாய்ந்த நாளேட்டு உறுதிச்சீட்டுக்கள் அவை உருவாக்கப்படும் போது அங்கீகரிப்பதற்கு நடைமுறையொன்று அமுல்படுத்தப்படல் வேண்டும்.